# விஸ்காம் (VISCOM) படிப்பில் என்ன குறை?

விஸ்காம் படிக்க விரும்பும் மாணவர்கள் விசுவல் மீடியா (VISUAL MEDIA) வில் துறையில் சாதிக்க விரும்புவர்கள் தான். ஆனால் பெரும்பாலான விஸ்காம் படித்து முடிக்கும் மாணவர்களுக்கு கிடைக்கும் முடிவு **வெறும் ஏமாற்றமே**. இதற்க்கான காரணத்தையும் அதற்கு ஏற்ற நிவாரணத்தையும் இங்கு பார்போம்.

## காரணம் 1: மேம்போக்கான பாடத்திட்டம்

விசுவல் மீடியா வில் பல்வேறு விதமான துறைகள் உள்ளன. இவையாவன: சினிமா, TV, குறும்படம், விளம்பரப்படம், சோசியல் மீடியா, பிரிண்டிங், ரேடியோ, பொது ஜனதொடர்பு, பத்திரிக்கை என்பன. இந்த ஒவ்வொரு துறையிலும், பல்வேறு உள்பிரிவுகள் உண்டு. உதாரணமாக, சினிமா துறையை எடுத்தால் அதில், டைரக்டர், கதை-திரைகதை-வசனம் எழுதுபவர், கேமராமேன், இசை சேர்பவர், நடிகர், நடிகைகள், எடிட்டர், VFX கலைஞர், டிஜிட்டல் சினிமா தொழில் நுட்பக்கலைஞர், ஒப்பனை செய்பவர், அரங்கம் அமைப்பவர், வண்ணம் சேர்ப்பவர், சினிமா விளம்பரம் பார்ப்பவர், சோசியல் மீடியா வில் மக்களுக்கு கொண்டு சேர்ப்பவர், இவ்வளவு வேலைகளுக்கும் உதவியாளர்கள் என்று நூற்றுக்கணக்கான வேலைகள் உண்டு. இதில், ஒரு வேலை பார்ப்பவர் இன்னொரு வேலையை செய்வது கிடையாது. அதற்கான தேவையும் வாய்ப்பும் மிக குறைவானதே. நிலைமை இவ்வாறிருக்க, மேம்போக்காக சினிமா பற்றி தெரிந்து கொள்வதால், அந்த துறைக்குள் நுழைய எந்த விதமான வாய்ப்பும் கிடையாது.

## காரணம் 2: வெறும் தியரி: செயல் அனுவம் இல்லாத பாடங்கள்

பாடங்களை பற்றி வெறும் புத்தகத்தில் படித்து, அதை அப்படியே பரீட்சையில் எழுதும் முறையினால் எந்த அறிவும், அனுபவமும் கிட்டாது. ஆனால் இதுதான் நடைமுறையில் உள்ளது. பெரும்பான்மையான விஸ்காம் கல்லூரிகளில், மாணவர்களுக்கு போடோக்ராபி வகுப்புகள் கூட இம்முறையில் நடத்தப்படுவதை பார்க்கிறோம். இதானால் மாணவர்கள் இந்த அருமையான துறையின் உண்மையான அனுபவ அறிவு இன்றியே வெளியே வருகின்றனர்.

காரணம் 3: துறை அனுபம் அற்ற ஆசிரியர்கள்:

எந்த ஒரு பாடமும், அந்த துறையில் பல ஆண்டு உயர்ந்த நிலையில் வேலை செய்தவர்களால் மட்டுமே, உணர்ந்து, சரியாக கற்பிக்க முடியும். குறிப்பாக மிக வேகமாக வளரும் இத்துறையில் இது மிக முக்கியம். தொடர்ந்து துறைகளில் வேலை செய்து கொண்டே கற்பிப்பது இன்னும் சிறப்பாகும்..அவ்வாறு இல்லை என்றால் மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களால் செய்ய முடியாத ஒன்றை தங்களாலும் செய்ய முடியாது என்று எதையும் முயற்சிக்காமல் இருந்து விடுவார்கள்.

## காரணம் 4: தொழில் துறையுடன் சம்பந்தம்/தொடர்பு இல்லாத நிலை:

பல்வேறு கல்லூரிகளில் உள்ள சம்பந்தப்பட்டவர்களுக்கு தொழில் துறையில் எந்த தொடர்பும் இல்லாததால், அவர்கள் மாணவர்களுக்கு வேலை கிடைப்பதற்கான எந்த ஒரு உதவியும் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். வெறும் பாடம் எடுப்பதுடன் தங்கள் பணி முடிந்து விடுவதாக அவர்கள் நினைப்பதால், மாணவர்கள் வெறும் காகிதத்தால் அச்சடிக்கப்பட்ட பட்டத்தை மட்டுமே நம்பி வேலை தேடி அலையும் நிலை உள்ளது.

**நிவாரணம்** 1: விருப்ப பட்ட துறையில் ஒரு பாடத்தை தேர்ந்தெடுத்து படிக்கவும். உதாரணமாக, சினிமா, டிவி துறையில் டைரக்டர் ஆக விரும்பும் மாணவர், அந்த பாடங்களை மட்டும் 3 ஆண்டுகள் படித்தால் சிறப்பாக பயிற்சி கிடைக்கும். இந்த துறையை படிக்கும் பொழுது அந்த துறையுடன் சம்பந்தமான எட்டிங் / கேமரா படிப்புகளை தெரிந்து கொண்டால் இன்னும் சிறப்பு.

**நிவாரணம்** 2: செய்முறை மூலமாக பயிற்சி தரும் கல்லூரிகளை சரியாக பார்த்து, சேரவேண்டும். இதற்க்கு மாணவர்கள் அந்த கல்லூரிக்கு நேரடியாக சென்று, அங்கு பாடம் நடத்தும் முறை, வசதிகள் என்ன உள்ளன ஆகியவற்றை அறிந்து கொள்வது முக்கியம்.

**நிவாரணம்** 3: கல்லூரிகளில் பாடம் சொல்லித்தரும் ஆசிரியர்களின் பின்புலம், அவர்களின் அனுவம் ஆகியவற்றை கேட்டுதெரிந்து கொள்வது முக்கியம். தவிர, அந்த ஆசிரியர்களை நேரிலும் சந்தித்து அவர்களுடன் பேசி, அவர்களுடைய அனுவம் பற்றி தெரிந்து கொள்வது மிக அவசியம்.

**நிவாரணம் 4:** சேரவிருக்கும் கல்லூரியில் பயின்ற மாணவர்கள் தற்போது என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்வது அவசியம். அவர்களுக்கு அவர்கள் படித்த துறையிலேயே வேலை கிடைக்க பெற்றதா, அதற்க்கு கல்லூரி உதவியாக இருந்ததா என்று தெரிந்து கொண்டு, அதன் பின் அந்த கல்லூரியை தேர்ந்தெடுப்பது சிறப்பாக இருக்கும்.

இது போன்று மேலும் பல விவரங்கள் உள்ளன. இது பற்றி தெரிந்து கொள்ளவோ, அலலது விசுவல் மீடியா துறையில் நுழைய விரும்பினாலோ, டாவின்சி மீடியா கல்லூரியை தொடர்பு கொள்ளவும். நீங்கள் ஏற்கெனவே, B.Sc (VISCOM) படித்து விட்டு வேலை இல்லாமல் இருந்தாலோ, அல்லது மேற்கொண்டு சரியான செயல் முறை படிப்புகளுடன் சேர்ந்த M.Sc (Viscom) படிக்க விரும்பினாலோ, எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

## பதிவு செய்க:

http://www.davincimediacollege.com/student-enquiry-registration

## தொலைபேசி: 97890 59046 / 48